(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 30 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2008, ஒற்றோபர் 21, செவ்வாய்க்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0086/ ' 08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005, 2006, 2007 ஆம் ஆண்டுகளில் கொழும்பு மாநகர சபைக்கு மத்திய அரசாங்கம் செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு என்பதையும்,

(ii) இவற்றை செலுத்தாததற்கான காரணம் என்னவென்பதையும்,

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒதுக்கப்பட்ட பணம் சம்பளங்களுக்காக செலவிடப் பட்டதா என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) குப்பைகளை சேகரிப்பதற்கான செலவிடப்பட்ட பணம் எவ்வளவு என்பதையும்,

(ii) கேள்விப் பத்திரங்கள் முறையாக கோரப்பட்டதா என்பதையும் நியமிக்கப்பட்ட கேள்வி மனுதாரர் கேள்வி மனுக்கோரல்கள் விதிமுறைகளுக்கு முழுமையாக இயைந்தொழுகுகின்றாரா என்பதையும்,

(iii) அனுபவம் தொடர்பான விதிமுறைகள் வேண்டுமென்றே தவிர்க்கப்பட்டதா என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) பராமரிப்பு சேவைகள் கம்பனியினால் பயன்படுத்தப்படும் குப்பை கொட்டும் இடத்தையும்,

(ii) இது சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டதா என்பதையும்

அவர் இச்சபைக்குக் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0087/ ' 08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி. திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை மத்திய வங்கியின் பிரதான செயற்பாடுகள் என்ன என்பதை அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மத்திய வங்கியானது அரசியல் தலையீடு அற்ற நிறுவனமா என்பதையும்,

(ii) நாட்டின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களை இன்றுள்ளவாறு தனித்தனியாகவும்,

(iii) முதல் மற்றும் வட்டி ஆகிய ஆக்கக்கூறுகளை தனித்தனியாகவும் மற்றும் 1948, 1955, 1956, 1977, 2001, 2004, 2007 ஆகிய ஆண்டுகளில் மொத்தமாக செலுத்தப்பட வேண்டிய தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) (i) அரசாங்கத்தின் நிலுவைகளை செலுத்துவதற்கென மத்திய வங்கியினால் அச்சிடப்பட்டு சந்தைக்கு விடப்பட்ட பணத்தொகையின் அளவு எவ்வளவு என்பதையும்,

(ii) 1995 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை ஒவ்வொரு வருடமும் செத்தெம்பர் 30 ஆம் திகதியிலுள்ளவாறு மக்கள் வங்கிக்கும், இலங்கை வங்கிக்கும் திறைசேரியின் கணக்கிலுள்ள நிலுவை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0088/ ' 08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளுக்கென மத்திய அரசினால் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபைக்கு வழங்கப்படவேண்டியிருந்த பணத்தொகையையும்,

(ii) அவற்றை வழங்காமைக்கான காரணத்தையும்,

(iii) மேற்கூறப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகையானது சம்பளங்களுக்காக செலவிடப் பட்டதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குப்பை சேகரிப்புக்கெனச் செலவிடப்பட்ட தொகையையும்,

(ii) கேள்விப்பத்திரங்கள் முறையாகக் கோரப்பட்டதா என்பதையும் நியமிக்கப் பட்ட ஒப்பந்தக்காரர் கேள்விப்பத்திர நிபந்தனைகளுக்கு முழுமையாக இணங்கி நடந்துகொண்டாரா என்பதையும்,

(iii) அனுபவம் பற்றிய நிபந்தனை வேண்டுமென்றே தவிர்க்கப்பட்டதா என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) பராமரிப்புச் சேவைகளை வழங்கும் கம்பனியால் பயன்படுத்தப்படும் குப்பை கொட்டுமிடத்தையும்,

(ii) அது சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட இடமா என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0204/ ' 08

4.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— வாழ்க்கைத்தொழில், தொழிற்பயிற்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வாழ்க்கைத்தொழில், தொழிற்பயிற்சி (அமைச்சரவை) அமைச்சருக்கு உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டுகளில் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0205/ '08

5.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— அரசியலமைப்பு அலுவல்கள், தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசியலமைப்பு அலுவல்கள், தேசிய ஒருமைப்பாட்டு (அமைச்சரவை) அமைச்சருக்கு உத்தியோக பூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டுகளில் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0206/ ' 08

6.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— சமூக அபிவிருத்தி, சமூக அநீதி ஒழிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமூக அபிவிருத்தி, சமூக அநீதி ஒழிப்பு (அமைச்சரவை) அமைச்சருக்கு உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டுகளில் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0378/ ' 08

7.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய சுற்றாடல் அதிகார சபையின் நிதி மேற்பார்வையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளவரின் பெயர், பிறந்த திகதி, வயது ஆகிய விபரங்கள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி பதவிக்கு இவரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு இவர் கொண்டிருந்த தகைமைகள் யாவையென்பதையும்,

(iii) இவரின் கல்வி மற்றும் தொழிற்தேர்ச்சி தகைமை இப்பதவியை வகிப்பதற்கு போதுமானதா என்பதையும்,

(iv) இவரின் மாதாந்த சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் யாவை யென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பதுளை பிராந்திய அலுவலகத்திற்கு நியமனம் பெற்ற பிரதி மேற்பார்வை யாளர் எவ்வடிப்படையில் அநுராதபுரம் மற்றும் கண்டி காரியாலயங்களில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளாரென்பதையும்,

(ii) இவர் பெற்றுக் கொள்ளுகின்ற மாதாந்த கொடுப்பனவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0379/ ' 08

8.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும், பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தியத்தலாவ இராணுவ முகாமிற்குச் சொந்தமான போலோ விளையாட்டு மைதானத்தை அடுத்துள்ள ஹலங்கொட வாவிக்கரையில் சட்டவிரோதமாக மாணிக்கக்கற்கள் அகழப்படுகின்றதென்பதையும்,

(ii) மேற்கூறப்பட்டவாறு அகழப்படுகின்ற மண்ணை நரியாகந்த எல்லையி லுள்ள வாவிக்கரைக்குக் கொண்டு சென்று அங்கு இயந்திரங்களைப் பயன்படுத்தி மாணிக்கக்கற்களை பெற்றுக் கொள்கின்றார்கள் என முறைப் பாடு கிடைத்துள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி, சட்டவிரோத மாணிக்கக் கல் அகழ்வு காரணமாக வாவிக்கு கீழ்ப்பகுதியில் உள்ள கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் பெரும் நீர் பற்றாக்குறைக்கு உள்ளாவதுடன் உலகப் பிரசித்தி பெற்ற போலோ விளையாட்டு மைதானமும் அழிவுக்குள்ளாகி வருகின்றதென்பதையும் அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இது சம்பந்தமாக ஆராய்ந்து இப்பெரும் அழிவினை தடுத்து நிறுத்த நடவடிக்கையெடுப்பாராவென அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0413/ '08

9.

கௌரவ பியசிறி விஜேநாயக்க,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பாடசாலை பற்சிகிச்சைச் சேவை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு யாது,

(ii) அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு தற்போது எந்த நிறுவனத்தின் மூலம் பயிற்சியளிக்கப்படுகின்றது,

(iii) பாடசாலை பெண் பற்சிகிச்சையளிப்பு உத்தியோகத்தர்களுக்கு இறுதியாகப் பயிற்சியளிக்கப்பட்டது எப்போது,

(iv) இலங்கையில் தற்போதுள்ள பாடசாலை பெண் பற்சிகிச்சையளிப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(v) வெற்றிடங்கள் உள்ள பாடசாலைப் பற்சிகிச்சை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(vi) அவ்வாறு வெற்றிடங்களுள்ள சிகிச்சை நிலையங்களுக்கு வருகின்ற பிள்ளைகளுக்கு சேவை வழங்குவது எவ்வாறு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பிள்ளைகளுக்காக பாடசாலை பெண் பற்சிகிச்சையளிப்பு உத்தியோகத்தர் களை ஆட்சேர்ப்பதற்கான காரணம் யாது,

(ii) குறித்த திணைக்களத்தினால் ஆட்சேர்க்கப்படாது தற்போது பயிற்சியை முடித்துள்ள பல் மருத்துவர்களது எண்ணிக்கை எவ்வளவு,

(iii) இவர்களது சேவையை நாட்டிற்குப் பெற்றுக்கொள்வது எவ்வாறு

என்பதை அவர் இச்சபைக்குக் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0478/ ' 08

10.

கௌரவ விஜித ரணவீர,— மின்வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007 ஆம் ஆண்டில் அம்பாந்தோட்டை மாவட்ட ரன்னெலிவெட்ட மின்சார கருத்திட்டத்தின் கீழ் அம்பலாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில் ஒவ்வொரு மின்வலு அபிவிருத்திப் பணிக்காகவும் செலவிடப்பட்டுள்ள பணம் எவ்வளவு,

(ii) அக்கருத்திட்டத்தின் கீழ் 2008 ஆம் ஆண்டுக்காக மதிப்பிடப்பட்டுள்ள பணமும் ஒவ்வொரு திட்டத்திற்காகவும் செலவிடப்படுகின்ற பணமும் எவ்வளவு

என்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2006 ஆம் ஆண்டு முடிவடைந்த போது வழங்கப்பட்டிருந்த மொத்த மின்சார இணைப்புகளின் எண்ணிக்கையும் 2007 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட எண்ணிக்கையும் எவ்வளவு,

(ii) 2007 ஆம் ஆண்டில் பாராளுமன்றம், மாகாணசபைகள், அமைச்சுக்கள், அரச நிறுவனங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்கள் என்பவற்றின் மூலம் சம்பந்தப்பட்ட தொகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்காக வழங்கப்பட்டுள்ள பணம் வெவ்வேறாக எவ்வளவு,

(iii) மேற்படி பணத்தில் வழங்கப்பட்டுள்ள மின்சார இணைப்புக்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) சம்பந்தப்பட்ட பிரதேச செயலகப் பிரிவில் இலங்கை மின்சார சபையினால் வசதிகள் வழங்கப்படாமை காரணமாக மின்சாரம் பெறாத வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) மேற்படி பிரிவுக்கான ரன்னெலிவெட்ட மின்சார கருத்திட்டத்தில் 2007 ஆம் ஆண்டிற்கான திட்டங்களும் இலக்குகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா,

(iii) ஆமெனில், அவை யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0479/ ' 08

11.

கௌரவ விஜித ரணவீர,— மின்வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007 ஆம் ஆண்டில் அம்பாந்தோட்டை மாவட்ட ரன்னெலிவெட்ட மின்சார கருத்திட்டத்தின் கீழ் அங்குணுகொலபெலஸ்ஸ பிரதேச செயலகப் பிரிவில் ஒவ்வொரு மின்வலு அபிவிருத்திப் பணிக்காகவும் செலவிடப்பட்டுள்ள பணம் எவ்வளவு,

(ii) அக்கருத்திட்டத்தின் கீழ் 2008 ஆம் ஆண்டுக்காக மதிப்பிடப்பட்டுள்ள பணமும் ஒவ்வொரு திட்டத்திற்காகவும் செலவிடப்படுகின்ற பணமும் எவ்வளவு

என்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2006 ஆம் ஆண்டு முடிவடைந்த போது வழங்கப்பட்டிருந்த மொத்த மின்சார இணைப்புகளின் எண்ணிக்கையும் 2007 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட எண்ணிக்கையும் எவ்வளவு,

(ii) 2007 ஆம் ஆண்டில் பாராளுமன்றம், மாகாணசபைகள், அமைச்சுக்கள், அரச நிறுவனங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்கள் என்பவற்றின் மூலம் சம்பந்தப்பட்ட தொகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்காக வழங்கப்பட்டுள்ள பணம் வெவ்வேறாக எவ்வளவு,

(iii) மேற்படி பணத்தில் வழங்கப்பட்டுள்ள மின்சார இணைப்புக்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) சம்பந்தப்பட்ட பிரதேச செயலகப் பிரிவில் இலங்கை மின்சார சபையினால் வசதிகள் வழங்கப்படாமை காரணமாக மின்சாரம் பெறாத வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) மேற்படி பிரிவுக்கான ரன்னெலிவெட்ட மின்சார கருத்திட்டத்தில் 2007 ஆம் ஆண்டிற்கான திட்டங்களும் இலக்குகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா,

(iii) ஆமெனில், அவை யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0480/ ' 08

12.

கௌரவ விஜித ரணவீர,— மின்வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007 ஆம் ஆண்டில் அம்பாந்தோட்டை மாவட்ட ரன்னெலிவெட்ட மின்சார கருத்திட்டத்தின் கீழ் சூரியடிவெவ பிரதேச செயலகப் பிரிவில் ஒவ்வொரு மின்வலு அபிவிருத்திப் பணிக்காகவும் செலவிடப்பட்டுள்ள பணம் எவ்வளவு,

(ii) அக்கருத்திட்டத்தின் கீழ் 2008 ஆம் ஆண்டுக்காக மதிப்பிடப்பட்டுள்ள பணமும் ஒவ்வொரு திட்டத்திற்காகவும் செலவிடப்படுகின்ற பணமும் எவ்வளவு

என்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2006 ஆம் ஆண்டு முடிவடைந்த போது வழங்கப்பட்டிருந்த மொத்த மின்சார இணைப்புகளின் எண்ணிக்கையும் 2007 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட எண்ணிக்கையும் எவ்வளவு,

(ii) 2007 ஆம் ஆண்டில் பாராளுமன்றம், மாகாணசபைகள், அமைச்சுக்கள், அரச நிறுவனங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்கள் என்பவற்றின் மூலம் சம்பந்தப்பட்ட தொகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்காக வழங்கப்பட்டுள்ள பணம் வெவ்வேறாக எவ்வளவு,

(iii) மேற்படி பணத்தில் வழங்கப்பட்டுள்ள மின்சார இணைப்புக்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) சம்பந்தப்பட்ட பிரதேச செயலகப் பிரிவில் இலங்கை மின்சார சபையினால் வசதிகள் வழங்கப்படாமை காரணமாக மின்சாரம் பெறாத வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) மேற்படி பிரிவுக்கான ரன்னெலிவெட்ட மின்சார கருத்திட்டத்தில் 2007 ஆம் ஆண்டிற்கான திட்டங்களும் இலக்குகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா,

(iii) ஆமெனில், அவை யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0499/ '08

13.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) திரு. வை. எம். டபிள்யூ. எச். எம். ஆர். ஆர். பண்டார 2005.09.27 ஆம் திகதியில் இருந்து 2007.01.12 ஆம் திகதி வரை கேகாலை, கலிகமுவ, இத்தமல்பான மகாவித்தியாலயத்தின் பிரதி அதிபராகவும் 2007.01.12 ஆம் திகதியில் இருந்து 2007.02.13 ஆம் திகதி வரை பதில் அதிபராகவும் சேவையாற்றினாரென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) கோட்டக்கல்விப் பணிப்பாளரின் சம்பவப்பதிவுக் குறிப்பு மூலமாக மேற்படி வித்தியாலயத்தின் அதிபர் பதவியை உதவி ஆசிரியையான திருமதி. ஈ. விமலாவதியிடம் எவ்வடிப்படையில் ஒப்படைக்கப்பட்டது,

(ii) பாடசாலை அதிபர் பதவியை திரு. பண்டாரவுக்கு மீண்டும் ஒப்படைக்குமாறு சப்ரகமுவ மாகாண பிரதம செயலாளரது பி.எம்.ஏ.டி. 07/04/03(II) இலக்கமும் 2007.02.27 ஆம் திகதியும் கொண்ட கடிதம் மூலமாக கேகாலை வலயக் கல்விப் பணிப்பாளரால் வழங்கப்பட்ட பணிப்புரையைத் திருமதி விமலாவதி நிராகரித்துள்ள அடிப்படை மற்றும் அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாது,

(iii) இது தொடர்பாக நிர்வாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளரது தீர்மானத்தை கேகாலை வலயக் கல்விப் பணிப்பாளர் மூலமாக அமுலாக் காமைக்கான காரணங்கள் யாவை,

(iv) இது சம்பந்தமாக சப்ரகமுவ பிரதம செயலாளர் பக்கச்சார்பற்ற தீர்மானத்தை வழங்கி 2007.12.17 ஆம் திகதிய கடிதம் மூலமாக கே/கலி/அரந்தர வித்தியாலய அதிபருக்கு இத்தமல்பான வித்தியாலயத்திற்கு இடமாற்றம் வழங்குமாறு சப்ரகமுவ மாகாணப் பணிப்பாளருக்கு வழங்கிய பணிப்புரை அமுலாக்கப்படாமைக்கான காரணம் யாது

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) இவ்விதமாக அதிபர் பதவியில் தொடர்ந்திருக்க திருமதி விமலாவதிக்கு அவசியமான அதிகாரம் எவ்வாறு கிடைத்தது,

(ii) சிக்கலைத் தீர்ப்பதற்காக வழங்கப்பட்ட தீர்மானம் எப்போது அமுலாக்கப்படும்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0500/ ' 08

14.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய நூலகத்தின் உதவி நூலகப் பொறுப்பாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு தொடர்பான வர்த்தமானப் பத்திரிகை எப்போது வெளியிடப்பட்டது,

(ii) மேற்படி பதவிக்காக விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் தகைமைகள் யாவை,

(iii) இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எப்போது நடத்தப்பட்டது,

(iv) நேர்முகப் பரீட்சைக்காகத் தோற்றியவர்களின் எண்ணிக்கை அத்துடன் அவர்களின் ஆகக்கூடிய மற்றும் மிகக் குறைந்த தகைமைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இப்பதவிக்காக நூலகத்தகவல் விஞ்ஞான, ஆவணமாக்கல் பட்டதாரிகள் எத்தனை பேர் விண்ணப்பித்துள்ளனர்,

(ii) சம்பந்தப்பட்ட உதவி நூல்நிலையப் பொறுப்பதிகாரி பதவிக்காக தற்போது நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு நியமனம் வழங்கப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை யாது,

(iii) அவர்களின் கல்வித் தகைமைகள் யாவை,

(iv) இப்பதவிக்காகச் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ள நூலகத்தகவல் விஞ்ஞான, ஆவணமாக்கல் பட்டதாரிகளின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0546 / '08

15.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய நூதன சாலைகள் திணைக்களத்தில் காட்சிக்கூட பொறுப்பாளர் பதவிக்கு அரசாங்க அலுவலக ஊழியர் சேவையின் 1 ஆம் தர பதவியில் 09/2004 இலக்க பொது நிர்வாக சுற்று நிருபத்தின் கீழ் ரீ. பீ. ஐ. 4 சம்பள அளவுத் திட்டத்தின் பிரகாரம் சம்பளம் செலுத்தப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) புதிய சம்பளத் திருத்தத்தின் கீழ் பி. எல். ஐ. 2006 சம்பள அளவுத் திட்டத்தில் 22 ஆவது படிநிலையில் வைத்து இவ்விரு பிரிவுக்கும் சம்பளம் செலுத்தப் பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தேசிய நூதன சாலைகள் திணைக்களத்தின் காட்சிக்கூட பொறுப்பா ளர்களுக்கு பி. எல். ஐ. 2006 சம்பள அளவுத்திட்டத்தின் 22வது படிநிலையில் வைத்து 10 மாதங்கள் சம்பளம் செலுத்திய பின்னர் அவ்வாறு செலுத்தும்படி அரும்பொருட்காட்சியக பணிப்பாளர் பரிந்துரை செய்திருநதும்கூட சம்பளம் மற்றும் ஊழியர் எண்ணிக்கை ஆணைக்குழுவின் பரிந்துரையின் மீது 6 /2001 சுற்றுநிருபத்தின் பி. எல். ஐ. 2006 சம்பள அளவுத்திட்டத்தின் 18ஆவது படிநிலை வரை அச்சம்பளம் குறைக்கப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) இவ்வாறு நூதன சாலைகள் திணைக்களத்தின் காட்சிக்கூட பொறுப்பாளர் களின் சம்பளத்தைக் குறைத்ததன் காரணமாக 6/2006 சம்பள சுற்று நிருபத்தை வெளிப்படுத்துவதற்கு முன்னர் அவர்கள் பெற்றுக் கொண்டிருந்த சம்பளத்தைவிட 450 ரூபா குறைவாக சம்பளம் பெறுகின்றனர் என்பதையும்,

(iii) இந்த நூதன சாலைகள் காட்சிக்கூட பொறுப்பாளர்கள் தமக்கு நிகழ்ந்த அநீதியை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு எம். ஆர். சி. 16747/06/எல்-13 ஆம் இலக்கத்தின் கீழ் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து அரசியலமைப்பின் 12(1) ஆவது உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப் படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதென ஆணைக்குழு 2007.11.21 ஆம் திகதி தீர்மானித்துள்ள தென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) தேசிய நூதன சாலைகள் திணைக்களத்தின் காட்சிக்கூட பொறுப் பாளர்களுக்கு நிகழ்ந்துள்ள இந்த சம்பள முரண்பாட்டைத் திருத்த அவர் உரிய நடவடிக்கை எடுப்பாரா?

(ii) ஆமெனில், எப்பொழுது முதல்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

தேசிய பொதுவழிகள் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*2.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 117, நிகழ்ச்சித்திட்டம் 2,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் 9.792 பில்லியன் ரூபா (ரூபா 9,792,000,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | ரூபா மில்லியன் |
|---|---|---|
| தலைப்பு 117 | — நெடுஞ்சாலைகள் வீதி அபிவிருத்தி அமைச்சு | |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — 2. அபிவிருத்தி நடவடிக்கைகள் | |
| செயற்திட்டம் | — 3. அதிவேக பாதை அபிவிருத்தி | 3.195 |
| | — 4. நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி | 2.030 |
| | — 5. வீதிகள் அகலமாக்கலும் விருத்தியும் | 1.160 |
| | — 6. பாலங்களும் மேம்பாலங்களும் நிர்மணம் | 2.485 |
| | — 7. சுனாமியால் பாதிக்கப்பட்ட வீதிகள் புனர் நிர்மணம் | 422 |
| | — 8. நிறுவனங்களின் உதவி | 500 |
| | மொத்தம் | 9.792 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2008, ஒற்றோபர் மாதம் 07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 6 வரையுள்ள மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 15,511,980,332.

*3.

தாவர, விலங்கினப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு .

*4.

பிரதேசிய சங்வர்த்தனை வங்கிச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*5.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*6.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*7.

மோட்டார் வாகன (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*8.

இலங்கை கடன் தகவல் பணியக (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

தேசிய புடைவை மற்றும் உடுதுணி நிறுவகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*10.

குடியியல் வான்செலவு சட்டமூலம். — இரண்டாம் மதிப்பீடு.

*11.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*12.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*13.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*14.

இந்திய வம்சாவழியினரான ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்கல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*15.

நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்கல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*16.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*17.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2009) — இரண்டாம் மதிப்பீடு.

*18.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*19.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*20.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*21.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*22.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத் துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 37 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்

### 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 37

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத் தின் இரண்டாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "இலங்கைப் புகையிரதத் திணைக்கள பண்டகசாலை முற்பணக் கணக்கு" — இலங்கை புகையிரதத் திணைக்களம் என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன் :-

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் **II** இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் **III** இல் குறித்துரைக்கப் பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை ரூபா 1,000,000,000 இலிருந்து ரூபா 680,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் **IV** இல் குறித்துரைக் கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை ரூபா 3,800,000,000 இலிருந்து ரூபா 3,900,000,000 வரை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை ரூபா 400,000,000 இலிருந்து ரூபா 550,000,000 வரை.

(இக்கட்டளை 2007.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2008.08.28.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2008 ஏப்பிறல் 30 ஆந் திகதிய 1547/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.10.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*25.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2008 ஓகத்து 26 ஆந் திகதிய 1564/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.10.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*26.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவர்,— நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் 29 ஆம் பிரிவுடனும் அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் வாடிக்கையாளர் ஒருவரின் வேண்டுகோள்களின்பேரில் இலத்திரனியல் நிதிக் கைமாற்றுதல் ஒவ்வொன்றையும் நிதிசார் உளவறிதற் கூறுக்கு அறிக்கையிடப்பட வேண்டிய நிதித் தொகையின் குறைந்த எல்லை விதிக்கப்பட்டு சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2008 ஜூன் 25 ஆந் திகதிய 1555/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.10.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*27.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியின் கீழ் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2008, சனவரி மாதம் 10 ஆம் திகதிய 1531/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான "2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை(தேயிலைத் தொழிற்சாலைகளின் நிர்மாணமும் தொழிற்பாடும்) குறைந்தபட்ச நியமங்கள் ஒழுங்குவிதிகள்" அங்கீகரிக்கப்படுமாக.

*28.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008

ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*29.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— "(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*30.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007 ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*31.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல. 1),— 2002.01.28 ஆம் திகதி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள், அரசியலமைப்பின் பதினேழாவது சீர்திருத்தத்தின் 27 (2) ஆம் பிரிவின் கீழ் 2002.01.29 ஆந் திகதியிலிருந்து குறித்த பதவிக்கு மீள நியமிக்கப்பட்டார். அதனையடுத்து, அரசாங்க சேவையில் மேற்கொள்ளப்பட்ட சம்பளத் திருத்தங்களின் வண்ணம், தேர்தல் ஆணையாளரின் சம்பளம் 2006.11.23 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டது, எனினும், செயலாளர் பிரமாணக் குறிப்பின் கீழ் இந்தப் பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்வது தொடர்பாக குறித்த சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப் படவில்லை யாதலால், தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள் மீள சேவைக்கு அமர்த்தப்பட்ட 2002.01.29 ஆம் திகதியிலிருந்து பதவி வகிக்கும் வரையான காலத்திற்குரிய சம்பள ஏற்ற பெறுமானங்களையும் சம்பளத்துடன் சேர்த்து வழங்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*32.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,- அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 153(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் திரு. எஸ். சுவர்ணஜோதி அவர்கள் 2008.01.04 ஆம் திகதியிலிருந்து கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்டதையடுத்து, கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்குரிய எஸ். எல். 4 ரூபா 47,515-12x1,425 — 64,615 சம்பள அளவுத்திட்டத்தின் ரூ. 58,915 சம்பளத்திட்டத்தில் நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. திரு. சுவர்ணஜோதி அவர்கள் பதவி வகிக்கும் காலம் வருடாந்த ஏற்றத்தை வழங்குவதற்கும் 2008.08.06 ஆம் திகதி அமைச்சரவையினால் தீர்மானிக்கப் பட்டது. ஆகையால், கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு. எஸ். சுவர்ணஜோதி

அவர்களுக்கு 2008.01.04 ஆந் திகதியிலிருந்து ரூ. 58,915 மாதாந்த சம்பளத்தை வழங்கவும், பதவிவகிக்கும் காலம் வரை பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றத்தை வழங்கவும் வேண்டுமென இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*33.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— நீதிச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்க ளுக்கும் செலுத்தப்படும் மாதாந்தப் படி, அவர்களின் மாதாந்த சம்பளத்தின் 1/3 க்குச் சமமான ஒரு படியாக இருக்க வேண்டுமெனவும், அது 2007 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் படிகள் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளு மன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளினால் தீர்மானிக்கப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் படியானது பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*34.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் ஊதியமும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்த ஊதியம் 2007.01.01 ஆம் திகதியி லிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாள ருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய ஊதியமும், படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக் கப்பட்ட ஊதியமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஊதியமும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*35.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— அரசியலமைப்பின் 155அ(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் கொடுப்பனவுகளும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவில் (எரிபொருள் படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தக் கொடுப்பனவு 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிளாசருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத் தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுகளும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக் கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*36.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1994 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பந்தியின் பிரகாரம் அக் குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டு மென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 66,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 80,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | | ரூ. 77,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளமும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*37.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

38.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.